# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, SALEM.

S.C.No.3/2016

Deposition of witness for Prosecution – PW17

| | | | |
|---|---|---|---|
| Name | : சுரேஷ் | Caste | : |
| S/o. | : குமரேசன் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed on 16.09.2025 in accordance with the provisions of Oaths Act No.44 of 1969.

A2 present, A1 absent, petition u/s.317 Cr.PC filed and allowed.

முதல் விசாரணை;

நான் ஈரோடு மாவட்டம், கருங்கல்பாளையத்தில் குடியிருக்கிறேன். நான் கட்டட வேலை செய்து வருகிறேன். 22.12.2014ம் தேதி காலை 10.30 மணிக்கு எனது உறவினர்கள் எனக்கு போன் செய்தார்கள். அப்போது நான் கருங்கல்பாளையத்தில் கட்டட வேலை செய்து கொண்டிருந்தேன். போனில் என் மைத்துனர் ராஜா, அவரது மனைவி சரோஜா, அவருடைய ஒன்னரை வயது குழந்தை தனலட்சுமி ஆகியோர் கொண்டலாம்பட்டியிலிருந்து இருசக்கர வாகனத்தில் ராசிபுரத்திலுள்ள

சரோஜாவின் வீட்டிற்கு செல்வதற்காக சந்தியூர் பிரிவு அருகே சென்றபோது விபத்து ஏற்பட்டதாக போன் மூலம் தகவல் சொன்னார்கள். நாமக்கல் ரோட்டிலிருந்து சேலம் நோக்கி வந்த டிப்பர் மணல் லாரி சென்டர் மீடியனை இடித்துவிட்டு சேலத்திலிருந்து நாமக்கல் நோக்கி சென்ற ஜோதி பஸ்சை இடித்துவிட்டு மைத்துனர் ராஜா சென்ற இருசக்கர வாகனத்தையும் இடித்துவிட்டு காட்டிற்குள் சென்று நின்றதாக தகவல் சொன்னார்கள்.

நான், என் மனைவி, எனது மகள் மூவரும் விபத்து நடந்த சந்தியூர் பிரிவிற்கு வந்து பார்த்தோம். அங்கு டிப்பர் லாரி மோதி என் மைத்துனர் ராஜா, அவரது மனைவி சரோஜா இருவரும் சம்பவ இடத்திலேயே இறந்து கிடந்தார்கள். என்னுடைய மைத்துனர் ராஜாவிற்கு தலையில் அடிபட்டு இருந்தது. சரோஜாவிற்கு தலையில் அடிபட்டு இருந்தது. எனது மைத்துனரின் குழந்தை தனலட்சுமியை மருத்துவமனைக்கு எடுத்து சென்றதாகவும் அவர் மருத்துவமனையில் இறந்துவிட்டதாக தகவல் சொன்னார்கள். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

சம்பவம் குறித்து யார் தகவல் சொன்னார்கள் என்றால் உறவினர்கள் சொன்னார்கள், பெயர் தெரியாது. நான் சொன்னவாறு எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றும் இறந்த நபர் எனது மைத்துனர் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

2ம் எதிரி தரப்பில் 1ம் எதிரி தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணை தழுவிக்கொள்ளப்பட்டது.

Sd/- S.Sumathy,
Principal Sessions Judge, Salem.